**விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபை - 2010**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

## 1.1. அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட உயர்ந்த பட்ச தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபை 2010 திசெம்பர் 31 முடிவுற்ற ஆண்டிற்காக உரிய கணக்கேடுகளை முறையாகப் பேணியுள்ளது எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக் கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர விஜய குமாரதுங்க ஞாபகார்த்த வைத்தியசாலைச் சபையின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது செயற்பாட்டு விளைவுகளையும் காசுப் பாய்ச்சலையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் நிதிக் கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) குறைத்துக் காட்டல்கள்

(i) மீளாய்வாண்டிற்கான பணிக்கொடைச் செலவினம் ரூபா 1,537,045 ஆக இருந்த போதிலும் அவை நிதிக்கூற்றுக்களில் ரூபா 1,495,005 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 42,040 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ii) அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வுத் தொகை சரியாக கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் ரூபா 109,887 தொகையான பணம் மீள காலக்கழிவாகக் கருதப்பட்டு மூலதன மானியங்களில் இருந்து கழிக்கப்பட்டு வருமானத்திற்குக் கொண்டுவரப்பட்ட காரணத்தினால் ஆண்டிற்கான பற்றாக்குறை அதே தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(iii) ரூபா 245,214 தொகையான அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் செலுத்தப்பட வேண்டிய பணிக்கொடைப் பொறுப்பிற்கு ஈடுசெய்யப்பட்டிருந்ததுடன் பின்னர் அத் தொகை மீள கணக்குகளுக்கு எடுக்கப்படுகையில் பணிக்கொடை ஏற்பாட்டுக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறைக்கு சீராக்கப்பட்டதன் காரணமாக ஆண்டிற்கான பற்றாக்குறை குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) அதிகரித்துக் காட்டுதல்

---------------------------------------

(i) ரூபா 68,628 பெறுமதியான 7 மின் விசிறிகளின் பெறுமதி இருப்பேட்டுப் பொருட்களாக கணக்கிடப்பட்டு இலாபநட்டக் கணக்கில் இருந்து பதிவழிக்கப்பட்டிருந்தமையால் பற்றாக்குறை அதே தொகையால் அதிகரித்திருந்தது.

(ii) மீளாய்வாண்டின் இறுதியில் பொருள் மெய்மையாய்வின் போது ரூபா 30,212 தொகையான எக்ஸ்ரே மற்றும் இரசாயன இருப்புப் பெறுமதி, இருப்பு மீள்மதிப்பு பெறுமதியில் உள்ளடக்கப்பட்டிராமையால் நிதிக்கூற்றுக்களில் அத் தொகையால் இருப்பு குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. இதன் காரணத்தினால் ஆண்டிற்கான பற்றாக்குறையும் அதே தொகையால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**1.2.2 பெறவேண்டிய கணக்குகள்**

2009 ஆம் ஆண்டின் போது சேவை இடைநிறுத்தப்பட்ட ஓர் உத்தியோகத்தரின் கடன் மீதிக்காக அறவிடப்படவேண்டிய ரூபா 245,215 தொகையினையும் அறவிடப்படுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2003 யூன் 2 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 4.2.1 இன் (இ) மற்றும் 4.2.2 ஆம் பிரிவு | வைத்தியசாலையின் பௌதீகச் செயற்பாட்டு இலக்கு நிதிச் செயற்பாட்டு இலக்கு என்பவற்றை தெளிவாகக் காட்டும் வண்ணம் தயாரிக்கப்பட்டு பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட முறையான செயற்பாட்டு திட்டம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 4.2.6 ஆம் பிரிவு | வைத்தியசாலையின் காலாண்டு செயற்பாட்டு அறிக்கை பணிப்பாளர் சபையின் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட்டிராததுடன் திறைசேரிக்கும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 5.2.1 ஆம் பிரிவு | பிரிவின் பிரகாரம் உள்ளடக்கப்பட வேண்டிய பிரிவு உள்ளடங்கலான பாதீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | (iv) | 5.2.4 மற்றும் 5.2.5 ஆம் பிரிவுகள் | வைத்தியசாலையினால் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டிற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிராததுடன் குறித்த காலப்பகுதியின் போது உரிய நிறுவகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவுமில்லை. |
| | (v) | 5.3 ஆம் பிரிவு | வைத்தியசாலையில் 2010 – 2014 ஆம் ஆண்டுகளிற்கான கூட்டுத்திட்டம் தயாரிக்கப்படுவதற்காக இலங்கை ஜயவர்தனபுர பல்கலைக்கழக பட்டப்பின்படிப்பு நிறுவகத்திற்கு ரூபா 385,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியிலும் இதன் பிரதிகள் உரிய நிறுவகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (vi) | 7.4.1 ஆம் பிரிவு | கணக்காய்வுக் குழுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.சுகாதார அமைச்சின் கணக்காய்வுக் குழு இவ் வைத்தியசாலைக்கும் உரியது என அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2007 மே 15 ஆம் திகதிய 30 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களச் சுற்றறிக்கை மற்றும் 2009 யூலை 08 ஆம் திகதிய பீஈடீ/பீயூ/சுற்றறிக்கை கடிதம் | | மீளாய்வாண்டின் இறுதியிலும் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு நடைமுறை தயாரிக்கப்பட்டு தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 2002 நவம்பர் 01 ஆம் திகதிய 12/2002 ஆம் இலக்க சுகாதார, போசனை மற்றும் நலன்புரி அமைச்சுச் சுற்றறிக்கை | | அமைச்சுச் செயலாளரின் அங்கீகாரம் பெறப்படாது எல்லை மீறப்பட்டு மேற்கொள்ளப்பட்ட மேலதிக நேர வேலைகளுக்காக செலவிடப்பட்டிருந்த தொகை |

ரூபா 161,730 ஆகும். தாதிமார்களின் பற்றாக்குறை, சத்திரசிகிச்சைகளுக்காக பகல் இரவு சேவையில் ஈடுபட வேண்டியமை என்பவற்றின் காரணமாக 100 மணித்தியாலங்களுக்கு மேலாக மேலதிகநேர வேலையில் ஈடுபடுத்தப்பட வேண்டியுள்ளதாக தலைவரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| (ஈ) | 2009 செப்தெம்பர் 28 ஆம் திகதிய 433(ii) ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | வைத்தியசாலையினால் சுத்திகரிப்புச் சேவைகளுக்காக ஒப்பந்தக்காரர் ஒருவரை தேர்ந்தெடுப்பதற்காக பத்திரிகை விளம்பரம் ஒன்றினை பிரசுரிப்பதற்கு ரூபா 39,312 தொகை செலவிடப்பட்டிருந்தது. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1. நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கு வைத்தியசாலைச் சபையின் செயற்பாடுகள் ரூபா 6,510,215 பற்றாக்குறையினை விளைவித்துள்ளதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்காக ரூபா 3,546,801 தொகையான பற்றாக்குறையும் ஏற்பட்டிருந்தது. இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதிசார் விளைவுகளில் ரூபா 2,963,414 தொகையால் பற்றாக்குறையில் அதிகரிப்பினைக் காணக்கூடியதாக இருந்தது. இதற்காக முக்கியமாக கண் நோயாளிகளைக் கொண்டு செல்வதற்காக செலவிடப்பட்ட ரூபா 1,268,700 தொகையான மேலதிகச் செலவினமும் பொது பாவனை மற்றும் மருத்துவ உபகரண செலவினம் ரூபா 3,301,436 ஆலும் அதிகரித்தமை காரணமாகியிருந்தது.

### 2.2 செயற்பாடுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாடு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே காண்பிக்கப்பட்டுள்ளது.

| | 2010 | 2009 | அதிகரிப்பு/ (குறைவு) அளவு | சதவீதம் |
|---|---|---|---|---|
| | -------- | -------- | ----------- | ---------- |
| | | | | % |
| சிகிச்சை பெற்ற வெளிநோயாளர் பிரிவின் நோயாளிகளின் எண்ணிக்கை | 134,775 | 137,684 | (2,909) | (2.12) |
| அவசர சிகிச்சை பிரிவுக்கு வருகை தந்த நோயாளிகளின் எண்ணிக்கை | 20,176 | 20,688 | (512) | (2.48) |
| மருந்தகத்திற்காக வருகை தந்த நோயாளிகளின் எண்ணிக்கை | 119,897 | 106,075 | 13,822 | 13.03 |
| தங்கி இருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை | 15,272 | 15,322 | (50) | (0.33) |
| | ---------- | ---------- | ---------- | --------- |
| | 290,120 | 279,769 | 10,351 | |
| | ====== | ====== | ====== | |
| மேற்கொள்ளப்பட்ட கண் அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை | 15,.878 | 13,433 | 2,445 | 18.21 |
| மேற்கொள்ளப்பட்ட வழமையான அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை | 100 | 210 | (110) | (52.38) |
| ஆய்வுகூட பரிசோதனைகளின் எண்ணிக்கை | 40,756 | 59,426 | (18,670) | (31.42) |
| எக்ஸ்-கதிர் ஆய்வுகளின் எண்ணிக்கை | 3,367 | 2,893 | 474 | 16.4 |

| | | | | |
|---|---|---|---|---|
| ஈ.சீ.ஜீ பரிசோதனைகளின் எண்ணிக்கை | 2,331 | 2,201 | 130 | 5.91 |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மொத்த செலவினம் | 120,653,737 | 101,790,718 | 18,863,019 | 18.54 |
| வழமையான நோயாளிகள் (எண்ணிக்கை) | 57,911 | 58,957 | (1,046) | (1.78) |
| ஒரு நோயாளிக்கு ஒரு நாளைக்கான செலவினம் (பெறுமானத் தேய்வு உட்பட) | 2,083 | 1,727 | 356 | 20.62 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மருந்தகத்திற்காக வருகை தந்த நோயாளிகளின் எண்ணிக்கை தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளின் எண்ணிக்கை என்பவற்றினை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் முறையே 13.03% ஆன அதிகரிப்பையும் 0.33% ஆன குறைவையும் காட்டி இருந்தது.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மேற்கொள்ளப்பட்டிருந்த கண் அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை 18.21% ஆல் அதிகரித்திருந்ததுடன் வழமையான அறுவைச் சிகிச்சைகளின் எண்ணிக்கை 52.38% ஆல் குறைவடைந்திருந்தது.

(இ) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆய்வுகூட பரிசோதனைகளின் எண்ணிக்கை 31% ஆல் குறைவடைந்திருந்த போதிலும் ஆய்வுகூட பொருட்களின் செலவினம் 62% ஆல் அதிகரித்திருந்தது.

(ஈ) முன்னை ஆண்டுடன் ஒப்பிடுகையில் நடப்பாண்டின் போது பொதுப் பாவனை மற்றும் மருத்துவ உபகரணங்களின் விலைகள் ரூபா 3,499,211 ஆல் அல்லது 1,669% ஆல் உயர்வடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறை அதிகரிப்பிற்கும் இச் செலவின அதிகரிப்பு நேரடியாகத் தாக்கமளித்திருந்தது.

(உ) சத்திரசிகிச்சை தொடர்பான செயலாற்றல் குறைவு தொடர்பாக குளிரூட்டி முறைமை செயற்பாடற்றமை தாக்கமளித்திருந்தது. மேலும் கண் சத்திரசிகிச்சைக்காக நோயாளிகள் வெளி சத்திரசிகிச்சை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தனர்.

## 2.3 பயன்படுத்தாத குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

ரூபா 452,532 பெறுமதியான மருந்துப்பொருட்கள், நுகர்வுப் பொருட்கள், காசு இயந்திரம் வீட்டு உபகரண இருப்பு என்பன 06 மாதங்கள் முதல் 10 ஆண்டுகள் வரையான காலப்பகுதியாக பயன்படுத்தாது குறைவான பயன்பாடுடைய நிலையில் காணப்பட்டன.

## 2.4 முகாமைத்துவ நலிவுகள்

அறுவைச் சிகிச்சை நிலையத்தின் சத்திரசிகிச்சை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 2 ஆண்டுகள் வரையான குறுகிய காலப்பகுதியில் ரூபா 13.44 மில்லியன் செலவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த குளிரூட்டல் முறைமையில் காணப்பட்ட குறைபாடு காரணமாக சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டிருந்தன.

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) இரண்டாம் ஆண்டு முதல் குளிரூட்டல் முறைமைக்கு சேவையிடுவதற்காக சேவைக் கம்பனி ஒன்றுடன் உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிராத போதிலும் குளிரூட்டல் முறைமையைச் செயற்படுத்துவதற்காக மாதாந்தம் உரிய கம்பனிக்கு ரூபா 55,200 படி செலுத்தப்பட்டிருந்தது. முறையான உடன்படிக்கை இன்மையால் குளிரூட்டல் முறைமை செயற்பாடற்றமைக்கு உரிய கம்பனிக்கு பொறுப்புக் கூற முடியாதிருந்தது.

(ஆ) இக் கட்டிட நிர்மாணிப்பும் குளிரூட்டல் முறைமையை வழங்கி பொருத்துதலும் ஒப்பந்த உடன்படிக்கைத் தரப்பினரான கட்டிடத் திணைக்களத்திற்கு, நிலவும் இக் குறைபாடு அறிவிக்கப்பட்டு சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டிராததுடன் வைத்தியசாலை முகாமைத்துவத்தினால் இது தொடர்பாக போதிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) குளிரூட்டல் முறைமை முறையாகச் செயற்பட்டிராமை, பேணப்படாமை சேவையிடப்படாமை என்பவற்றினால் பல்வேறு நிறுவகங்களுக்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட நேர்ந்தமை போன்ற காரணங்களினால் வைத்தியசாலைக்கு ரூபா 5,148,275 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

## 2.5 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் செலவினங்களுக்கு இடையே கருத்திற்கொள்ளப்பட வேண்டிய முரண்கள் ஏற்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புக்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) களஞ்சியக் கட்டுப்பாடு

(ஆ) சமைக்காத உணவுப் பொருட்கள் வழங்கலுக்காக விலைமனுக்கள் கோரல்

(இ) சுத்திகரிப்பு சேவை வழங்கல்

(ஈ) கண் சத்திரசிகிச்சைக்காக பண அறவீடு தொடர்பாக பதிவுகளை மேற்கொள்ளல்.

(உ) இடர் கடன் செலுத்தப்படுவதற்குரிய சுழற்சி நிதியம் தொடர்பான தகவல்கள் பேணப்படல்